## மெட்ரோ ரெயில் நிர்வாகம் அறிமுகப்படுத்திய

# ஷேர் ஆட்டோ- டாக்சியில் 5½ லட்சம் பேர் பயணம்

சென்னை, அக்.18–
சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

சென்னை மெட்ரோ ரெயில் நிர்வாகம் சார்பில் ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி சேவைகள் 6 மெட்ரோ ரெயில் நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த சேவைகளை கடந்த மாதத்தில்(செப்டம்பர்) 48 ஆயிரத்து 664 பேர் பயன்படுத்தியுள்ளனர். மேலும் இந்த சேவை தொடங்கிய முதல் கடந்த மாதம் 30–ந்தேதி வரை 5 லட்சத்து 34 ஆயிரத்து 869 பேர் பயன்படுத்தியுள்ளனர்.

இதைப்போல் சென்னை சென்டிரல், விமானநிலையம், ஏஜி–டி.எம்.எஸ் உள்ளிட்ட 11 மெட்ரோ ரெயில் நிலையங்களில் சொகுசு சேவையை சென்னை மெட்ரோ நிர்வாகம் அறிமுகப்படுத்தியது. இந்த சேவையை கடந்த மாதம் 7 ஆயிரத்து 232 பேர் பயன்படுத்தியுள்ளனர். மேலும் 32 மெட்ரோ ரெயில் நிலையங்களிலும் இந்த சொகுசு கார் சேவையை விரைந்து செயல்படுத்தும் பணியில் சென்னை மெட்ரோ நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.